**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.24/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.விஜயா |
| Husband Name | திரு.ரவி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 11.08.2025.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

என்னிடம் காண்பிக்கப்படும் நான் என் வழக்கறிஞருக்கு கொடுத்துள்ள வாக்காலத்து நாமாவில் உள்ள விஜயா என்ற கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் சரிபார்த்தல் பத்தியில் மேலும் கீழும் உள்ள விஜயா என்ற இரண்டு கையெழுத்துகளும், ஆவணப்பட்டியலில் உள்ள விஜயா என்ற இரண்டு கையெழுத்துகளும் என்னுடைய கையெழுத்துகள் இல்லை. (சாட்சியிடம் நன்றாக பார்த்துவிட்டு பதிலளிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்திய பிறகும் சாட்சி அவரது வக்காலாத்திலும், பிராதிலும் உள்ள விஜயா என்ற கையெழுத்துகளை பார்த்துவிட்டு அந்த கையெழுத்துகள் தன்னுடைய கையெழுத்துகள் இல்லை என கூறுகிறார்.) வழக்கு சொத்துகளில் எனக்கு உரிய பாகத்திற்கான பணத்தை நான் என் சகோதரர்களிடமிருந்து ஏற்கனவே பெற்று கொண்டு விடுதலை ஆவணங்கள் மற்றும் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியானது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் கால வரம்பு சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 28.02.2020 அன்று ஆவணங்களில் கையெழுத்து நான் போட்டுவிட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மட்டும் செல்லாமல் சென்றுவிட்டதால் மட்டுமே இந்த வழக்கு சொத்துகளில் பாகம் கேட்க முடியாது என்றால் தவறு. முதல் விசாரணை வாக்குமூலத்தில் தவறான விசயங்களை சொல்லியுள்ளேன் என்றாலும், எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவிலுள்ள

சர்வே எண்ணும் இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணும் மாறுபட்டு இருப்பதால் எனக்கு இந்த வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் 7–வது இனச்சொத்தில் 7 சென்ட் மற்றும் 1–வது இனச்சொத்தில் 39 சென்ட், 2–வது இனச்சொத்தில் 24 சென்ட் ஆகிய 3 இனச்சொத்துகளும் என் தந்தை பெயரில் உள்ள சொத்துகள் என்பதால் என் தங்கையின் திருமண செலவிற்கான ஏற்பட்ட கடனை அடைக்கும் பொருட்டு எனக்கு அந்த சொத்துகளில் 7–ல் ஒரு பாகம் மட்டும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.